Free Issue

# Tamil Business

Business Information In Tamil



## உலகப் பணக்காரர் வரிசையில் தமிழரும் ஒருவர்

Issue 8 February I March 2004

மாதாந்த வணிகச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசல்....

எம்மை வளர்கின்ற அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் வணக்கங்கள்.
இன்று புதிய பொருட்கள் சந்தைக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஒரு பொருள் வாங்கினால் இன்னொன்று இலவசம் என்கின்ற ஆரோக்கியமான போட்டி ஒன்றும் நிலவுகின்றது. இதனால் வாடிக்கையாளர்கள் இன்று பலன் அடைகிறார்கள் என்பது உண்மை.

ஆனாலும் வாடிக்கையாளர்கள் மத்தியிலே அப்பொருள் தரமற்றதாக இருக்குமோ என்ற கேள்வி எழலாம். இது உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடையமாகும்.

மீண்டும் மீண்டும் அனைத்து வாசகர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் எம் வளர்ச்சியில் அக்கறையுள்ள அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளை கூறிக்கொள்கிறோம்.

-நன்றி-

-ஆசிரியர்.



இதுவரை நீங்கள் காணாத வகையில் வித்தியாசமான முறையில் அமைக்கப்பட்ட, சித்திர வேலைகள் அமைந்த, 130 இருக்கைகள் கொண்ட உணவகம், சுவையான இலங்கை இந்திய உணவுகள் சுடச்சுட பரிமாறப்படும். அத்துடன் தனியார் விருந்துபசரங்கள், திருமண விருந்துபசாரங்கள் போன்ற அனைத்து வைபவங்களுக்கும் ஏற்ற உணவகம்.

42-44 Ealing Road, Wembley, Middx
Tel/ Fax: 020 8902 0660
Mobile: 07956 832 633

Ginnamon
Gardens

FAST CASH
SAME DAY MONEY TRANSFERS

**Tamil Business** P.O.Box 716, Wembley, HA0 3WL
**TEL | FAX:** 020 8677 6779 Mobile: 07949 000 506
EMAIL: info@thetamilbusiness.co.uk WEB: www.thetamilbusiness. co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்.

S.Siva
Registered Tax Adviser

கடந்த பல இதழ்களில் எந்த வகையில் பிள்ளைகளுக்கான கொடுப்பனவு *(Child Tax Credit)*, குடும்பங்களுக்கான கொடுப்பனவுகளைப் *(Working Families Tax Credit)* பெற்றுக்கொள்வது என்பதனை பார்த்திருந்தோம்.

ஆகவே இந்த இதழிலே இத்தகைய கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் இன்னும் மேலதிகமாக எவ்வாறான சலுகைகளைப் பெறக்கூடியதாக இருக்கும் என்பதனைப் பார்ப்போம்.

## வைத்திய செலவு

வைத்தியத்துக்குரிய செலவை பெறுவதாயின் முதலில் பிள்ளைகளுக்கான கொடுப்பனவையும், குடும்பத்துக்கான கொடுப்பனவையும் பெறுபவராகவோ அல்லது குடும்பத்துக்கான கொடுப்பனவுடன் இயலாதவருக்கான கொடுப்பனவை *(Disability Element)* சேர்த்து பெறுபவராகவோ அல்லது தனியே பிள்ளைகளுக்கான கொடுப்பனவை மாத்திரம் பெறுபவராக இருப்பதுடன் இக் கொடுப்பனவைப் பெறுகின்ற குடும்பதினுடைய மொத்த வருட வருமானம்*(Gross Income)* ஆனது £14200 அல்லது அதிலும் பார்க்க குறைவாக இருப்பின் அக் குடும்பமானது மருத்துவச் செலவு *(Prescriptions)*, பல் வைத்தியத்துக்குரிய செலவு *(Dental Treatment)*, மருத்துவப் பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு போய்வருகின்ற செலவு, கண் பரிசோதனைக்கு உரிய செலவுடன் கண்ணாடிக்கான செலவு என்பவற்றை சலுகையாக பெற்றுக் கொள்ளகூடியதாக இருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**SEND TO DAY COLLECT TO DAY**

* உத்தரவாதம் * பாதுகாப்பு * விரைவானது

# SRI LANKA

பணமாற்று சேவைக்கு **FAST CASH**

இன்றே அனுப்புங்கள்.... இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.....

நூறுக்கு மேற்பட்ட வங்கிக் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

SEYLAN BANK LIMITED
The bank with a heart

பணமாற்றுச் சேவைக்கான ஆகக்குறைந்த கட்டணம்.

**£5.00**

FAST CASH
SAME DAY MONEY TRANSFERS

We Credit all Bank Accounts

நீங்கள் அனுப்புகின்ற பணத்தை இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளிலும் பெற்றுக்கொள்ளலாம், இதற்காக நாங்கள் எவ்வித கட்டணமும் அறவிடுவதில்லை

COMMERCIAL BANK

மேலதிக விபரங்களுக்கு

**020 8886 4488**

සම්පත් බැංකුව
SampathBank

HATTON NATIONAL BANK LIMITED

**New Branches now at JAFFNA,BATTICALOA, VAVUNIYA &TRINCOMALEE**

HSBC

CREDIT OUR ACCOUNT AT BARCLAYS

*For instant fastcash transfer to srilanka*

A/C No: 70713945,Sode Code: 20-36-47
A/C Name: C.E.C.Ltd

BANK OF CEYLON

Pay at BARCLAYS

www.cecltd.biz

Currency Exchange Corporation Ltd
No.125-127 Bramley Road, Oakwood,London N14 4UZ,E-mail: info@cecltd.biz

Digitized by Noolaham Foundation.



### குழந்தைகளுக்கான செலவு

இச் சலுகையைப் பெறுவதற்கும் மேற்குறிப்பிட்டது போல் குழந்தைகளுக்கான கொடுப்பனவுடன் 16 மணித்தியாலங்களோ அல்லது அதற்கு மேற்படாத மணித்தியாலங்களோ வேலை செய்யமுடியாததுடன், குடும்பத்திற்கான கொடுப்பனவுக்கும் தகுதியற்றவராக இருக்கின்ற ஒருவராகவோ இருப்பதுடன் அவருடைய வருட வருமானமானது ஆண்டுக்கு £13230 குறைவாக இருப்பின் குழந்தையின் பராமரிப்புச் செலவு, குழந்தைகளுக்கான பால்மா செலவு, பள்ளிக்கூட (Tripe) போக்குவரத்துச் செலவு என்பற்றுடன் பள்ளிக்கூட உணவுக்கான செலவைப் பெறுவதற்கு உங்களுடைய *Local Education Authority* ஐ அணுகி அவர்களிடம் உங்கள் கொடுப்பனவு அத்தாட்சிகளை காண்பிப்பதன் மூலம் உங்களால் அக் கொடுப்பனவையும் பெறக்கூடியதாக இருக்கும்.


### சட்ட ஆலோசனைச் செலவு

இக் கொடுப்பனவைப் பெறுபவர்கள் அனைத்து வகையான கொடுப்பனவையும் பெறுபவராக குறிப்பாக பிள்ளைகளுக்கான கொடுப்பனவையும், குடும்பத்துக்கான கொடுப்பனவையும் பெறுபவராகவோ அல்லது வேலை செய்பவராகவும் இயலாதவருக்கான *(Disability Element)* கொடுப்பனவை பெறுபவராக இருப்பதுடன் அவருடைய மொத்த வருட வருமானமானது £14200 ஆகவோ அல்லது அதனிலும் குறைவானதாக இருப்பின் அவரால் *Civil Court Fees* ஆகவோ அல்லது *Criminal Court Fees* ஆகவோ இருக்கக்கூடிய இச்சலுகையை பெறமுடியும். அதுமாத்திரமன்றி *Income Support* எடுக்கும் குடும்பங்களும் *Income Based Job Seekers Allowance* பெறுகின்ற குடும்பங்களும் இத்தகைய சலுகையை பெறமுடியும்.

*Working Families Tax Credit, Child Tax Credit Contact Number 0845 300 3900. www.inlandrevenue.gov.uk/taxcredit*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# SKY WINGS LTD
TRAVEL AGENTS



Specialists For
USA – CARIBBEAN – CANADA
AFRICA – ASIA – MIDDLE EAST
FAR EAST – AUSTRALIA – EUROPE

Main Agents For
- Sri Lankan Air Lines
- Qatar Airways
- Royal Jordanian
- Garuda Indonesia
- Air India
- Egypt Air

Tel : 020 8672 9111

119 Tooting High Street
London SW17 0SY
Tel : 020 8672 9111 Fax : 020 8672 0951 Mob : 07850 876 921
email : bala@skywings.co.uk web : www.skywings.co.uk

# S&E BRAZIER & SON




S&E BRAZIER & SON

Pricing Guns The most popular reliable product currently available on the market buy 4 boxes of plain labels and get 1 Lynx C-6 labeller Free (45000 labels per box) We can also print your name on the labels

Established Since 1965

cash Register Rolls,Commpatible Ink Ribbons and Rollers for cash Registers, Calculators and Printers pricing Guns, Data Guns, price Gun Ink Rollers, Ribbons Cassettes, Twinspool Ribbons Rollers.

London: 020 8959 6944
Ipswich: 014 7372 9125
Fax: 014 7372 9126
Mobile: 07831 201 554



LP-CNT Price Computing Scale With Tower


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இதழில் குறிப்பிட்டபடி *Life Investment Product* இனை எடுத்திருந்தால் அதனை இன்று நிறுத்தி அதிலுள்ள காசினை எடுப்பது புத்திசாலித்தனமல்ல என்பதனை மீண்டுமொருமுறை உங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.

எனேனில் *Endorment Policy* என்று எம்மவர்கள் எல்லோராலும் கருதப்படுவது *Agent Commission* இல் விற்கப்பட்ட ஒரு *Policy* இது மிகவும் தவறான நினைப்பு. இன்று இவ்வாறன ஒரு *Policy* நீங்கள் வாங்க முடியாது.

நீங்கள் இது வரை காலமும் செலுத்திய கட்டுப் பணத்துக்கு சமமாகவோ அல்லது குறைவானதாகவே இன்று இந்த *Policy* இருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

இங்கு ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள். பங்குச் சந்தை இன்று நாளுக்கு நாள் கூடி வருகிறது பங்குச் சந்தையின் முடிவே உங்களது முடிவாகும்.

அத்துடன் இப்பொழுது நீங்கள் அவ்வாறன *Policy* இனை நிறுத்துவீர்களாயின் உங்களால் *Life Cover* (இறந்த பின்

**M.வைகுந்தவாசன். B.Sc,MLIA (DIPLOMA) ,MAQ (CII) TEL:020 8543 8484**

# வீடு வாங்குவதற்கு.....




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்ற தொகை) அல்லது *Crtical Iliness* (எதாவது வருத்தம் வந்தால் கிடைக்க கூடிய தொகை) இவைகளை பெற முடியாமல் போக கூடியதாக இருக்கும்.

அத்துடன் இன்றைய சந்தையில் உள்ள *Policy* எல்லாம் *Term Assurance* உங்களுக்கு ஏதாவது அசாதாரணமாக நடந்தால் மட்டுமே அந்த குறிப்பிட்ட வருடத்துக்குள் கிடைக்கும். அந்த காலத்தை கடந்து விட்டால் உங்களது கட்டுப் பணமும் கிடைக்காது. *Death Beregit* இறந்த பின்னரும் இல்லாமல் போகும்.

மேலும் கூறப்போனால் உங்களிடமுள்ள *Endorment Policy* ஐ நீங்கள் *Cancell* செய்வதற்கு முதல் பல நிறுவனங்கள் *Life Cover* இனை விட கூட காசு கொடுத்து வாங்குவதற்கு உள்ளன.

நீங்கள் ஒரு நிமிடம் யோசியுங்கள் ஏன் இந்த *Company* கள் எல்லாம் உங்களது *Policy (Second hand Policy )* வாங்குகிறார்கள் என்று.

அவர்களுக்கு *(Company)* தெரியும் இந்த *Policy* இன் முக்கியத்துவம். நான் என்னுடைய அனுபவத்தில் பலரை பாாத்திருக்கிறேன் பலர் தமது உறவினர்கள் அரை குறை ஆலோசனைகளை வழங்குவதனால் அவர்கள் அதன் அடிப்படையில் முடிவுகளை எடுத்தவுடன் பல ஆயிரக்கனக்கான பண முதலீடுகள் மட்டுமல்லாமல் பன் மடங்கு வட்டிகளையும் இழந்துள்ளனர். இத்தகைய விடையங்கள் இன்று நம்மவர்கள் மத்தியில் சாதாரனமாக நடக்கும் நிகழ்வுகளில் ஒன்றாகவுள்ளது. ஆகவே இந்த விடயங்களில் நீங்கள் ஏதாவது முடிவு எடுக்கும் முன்பு ஒரு அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசனையினைப் பெற்று முடிவெடுப்பது நல்லது என்பது எனது கருத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R.&.S ACCOUNTANCY SERVICES

**Company Formation/ Financial Services/ Self Assessment Tax Returns / Corporation Tax Returns/ Computerisede Payroll/ Vat Returns/ Tax Planning and Investigation/ Management Accounts/ coputerised Book Keeping and Accounts/ commercial Loan/ Family Tax, Child Tax Credit etc....**

Friendlier and more Flexible Services

**Contact SIVA I KANNAN**

**103 Wadham Gardens, Greenford, Middlesex UB6 BS**
**[t] 020 8423 5059 [f] 020 8864 7887**
**[m] 07870 729 840**


## கடிதம்

**வணக்கம் ஆசிரியர்.**

நீங்கள் அனுப்பிய தை மாத இதழும் இசைத் தட்டும் கிடைக்க பெற்றேன். முதலில் அதற்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். தங்களுடைய சஞ்சிகையில் வருகின்ற கொடுப்பனவுகள் பற்றிய தொடர் கட்டுரையினால் எனக்கு தெரிந்த நண்பர்கள் பலர் பயன் அடைந்துள்ளார்கள். அதனாலேயே உங்களுடைய முன்னைய இதழ்களையும் பெற்று படித்து வருகின்றேன். கூடிய விரைவில் நானும் அக்கொடுப்பனவை பெற்றுக் கொள்வேன் என நினைக்கிறேன்.

**திரு காத்திகேசு. மணிவண்ணன். SW17**

**வணக்கம் Tamil Business**

உங்கள் அனைவருக்கும் நன்றிகள். இன்று இலண்டனில் இருந்து கிட்டத்தட்ட ஐந்துக்கு மேற்பட்ட இலவச பத்திரிகைகள் வருகின்றன அவை அனைத்துமே எதுவித வித்தியாசமும் இல்லாது பெயரில் மாத்திரமே வித்தியாசத்தை காட்டுகின்றன. உங்கள் சஞ்சிகை ஒன்று தான் அனைவருக்கும் உபயோகமாக உள்ளது. உங்கள் பணி தொடரட்டும்.

**திருமதி உதயன் வான்மதி HA0**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Top World Rich List 2003

வர்த்தகம், சினிமா, விளையாட்டு போன்ற உலகில் உள்ள எந்த துறையாக இருந்தாலும் அதில் முதலிடத்துக்கு வர வேண்டுமாயின்



கடுமையான உழைப்பும் திறமையும் இருக்க வேண்டும்.

அந்த வகையில் கடந்த மாதம் அமெரிக்காவிலுள்ள Forbes (போர்ப்ஸ்) என்கின்ற வணிகச் சஞ்சிகை 2003 ஆண்டின் 587 கோடீஸ்வரர்களின் பெயர் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இவ் உலகப் பணக்காரர் வரிசையில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 64 புதியவர்கள் இணைந்துள்ளாாக்ள்.

இவ் வணிகச் சஞ்சிகை வெளியிட்டுள்ள கோடீஸ்வரர்களில் தொடர்ந்து பத்து வருடங்களாக MicroSoft நிறுவனத்தின் நிறுவனர் Bill Gates அவர்களே முன்னனியில் இருக்கின்றார். அவருடைய சொத்து மதிப்பு. $46.6 billion ஆகும்.

அவருக்கு அடுத்த இரண்டாவது இடத்தில் இருப்பவர் Warren Buffett அவர்களுடைய சொத்து மதிப்பு $42.9 billion ஆகும்.

இந்த இடத்தில் இன்னுமோர் அதிசயிக்கதக்க விடையம் என்னவெனில் கடந்த



இரண்டு வருடங்களுக்கு முன்னர் வரை அரசாங்க உதவித்தொகையில் குடும்பம் நடாத்தி வந்த Harry Potter என்ற நாவலை எழுதிய JK Rowling அவர்களும் இத் தர வரிசையில் இடம் பெற்றுள்ளார். நாம் அனைவரும் பெருமைப் படத்தக்க வகையில் கோடீஸ்வரர் தர வரிசையில் கணனி மென் பொருட்களை உற்பத்தி செய்கின்ற சிவ நாடார் என்கின்ற தமிழர் $1.8 billion சொத்து மதிப்புடன் 310 ஆவது இடத்தில் உள்ளார். இவருடன் சேர்த்து இந்தியாவை சேர்ந்த 9 பேர் இடம் பெற்றுள்ளார்கள்.

இவர்களை விட ஆசிய நாட்டவர்களாக சிங்கபூரை சேர்ந்த 5 பேரும், மலேசியாவில் இருந்து 5 பேர், தென்கொரியாவில் இருந்து 2 பேர், தாய்லாந்தில் இருந்து 2 பேரும், பிலிப்பைன்ஸ் நாட்டவர் 2 பேர், இந்தோனிசியா, சீன ஆகிய நாடுகளை சேர்ந்த தலா ஒருவரும் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.


எந்த ஆண்டில் உங்கள் பெயர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Google

Google இன்று உலகின் அதிகமாக கணனி பாவனையாளர்களினால் பயன்படுத்தப்படும் இணையத் தேடுதளமாகும்.
ஐரோப்பாவில் மாத்திரம் இவ் இணையத்தை பாவிப்பவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ *55.6* மில்லியன் என ஒரு கணக்கெடுப்பு கூறுகின்றது. அதை விட வியப்பழிக்க கூடிய இன்னோர் தகவல் இவ் இணையத் தளம் விளம்பரம் ஊடாக ஈட்டுக்கின்ற வருமானம் ஏறத்தாழ *£540* மில்லியன்களாகும்.

ஆசை யாரைத்தான் விட்டது.... இவ் இணையத்தளத்தின் வருமானத்தை கண்டு வியப்படைந்த உலகின் முதலாவது பணக்காரர் என்ற பெருமையைக் கொண்டவரும் Microsoft நிறுவனத்தின் நிறுவனருமாகிய Bill Gates அவர்கள் தனது குழுவினருடன் தானும் ஒருவராக இணைந்து இலகுவானதும் Google இலும் பார்க்க அதிகளவான இணைய பாவனையாளர்களை கவரும் நோக்குடன் ஸ்பைடர் (Spoder) என்கின்ற மிக சக்தி வாய்ந்த இணையத்தேடு தளம் ஒன்றை தாயாரிக்கும் பணியில் கடந்த ஒரு வருடகாலமாக ஈடுபட்டு வருகின்றார் என்பது கணனி பாவனையாளர்களுக்கு நல்லதோர் செய்தியாகும்.



## Vs

## Bill Gate

கணனி மென் பொருள் உலகில் இன்று யாராலுமே வெற்றி கொள்ள முடியாத உயரத்தில் இருக்கின்ற Micro soft நிறுவனத்தினால், இணையத்தேடு தளங்களிலேயே அதிசயிக்கும் வகையில் தொழிற்பட்டு வருகின்றதுடன், உலகம் பூராகவும் அதிகளவான இணையப் பானையாளர்களையும் கொண்டு வெற்றி நடை போடுகின்ற Google இணையத்தை இலகுவில் வெற்றி கொள்ள முடியாது என கணனி வல்லுனர்கள் சொல்கிறார்கள்.

எதிலுமே புதியதையே விரும்பும் மக்கள் இவ் விடையத்தில் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SPECIAL OFFER
ANYONE BUY BEFORE 31ST MARCH 100% MONEY BACK WITHIN 12 MONTH.

# Visabell



## CCTV Doorbell Camera





- Automatically displays the caller at your door on your own TV!*
- Pleasant two tone chime
- Tough weatherproof housing
- Modern hi-tech design
- Can switch TV automatically or give audible alert for you to manually select the correct TV channel, to view the caller.
- Can be connected to your TV or video and can record your visitors during the course of the day or night.
- Can be viewed at any time on your TV set by selecting the course TV Channel.
- Selectable dwell viewing time (so you don't miss too much football).









£ 250
INCLUDING THE INSTALLATION AND 1 YEAR FULL WARRANTY

SEND THE ORDERS WITH CHEQUE PAYABLE TO :
LONDON CIRCUITS LTD
27 BERESFORD ROAD
NEW MALDEN
SURREY KT3 3RQ

ENQUIRE TEL: 020 8942 4108 / 020 8408 0210
RAJAH - MOBILE : 07958 617 124
E-mail:sriganes@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரிகள் கவனத்திற்கு

இன்றைய நம்மவர்கள் வியாபார நிலையங்களிலே நிறுவன உரிமையாளர் தொடக்கம் ஊழியர்கள் வரை விடுகின்ற பொதுவான தவறு தாங்கள் விற்பனை செய்கின்ற சில விற்பனை விலையை அறியாமல் இருப்பது அல்லது அப் பொருட்களின் மீது விலையினை பொறிக்காமல் விடுவதாகும்.

இத்தகைய செயற்பாடு பெரிய தவறாக உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம். உதாரணமாக ஒரு பொருளை வாடிக்கையாளர்கள் வாங்கும் பொழுது அப் பொருளின் மீது விலை குறிக்காமலும், அதனுடைய விலையை நீங்க்ள் அறியாமல் இருப்பீர்களாயின் ஒரு வித தடுமாற்றத்துடன் ஏதாவது ஒரு விலையை சொல்லி அப் பொருளினை விற்பனை செய்யக்கூடும். இந்த நிலையில்



வாடிக்கையாளர்கள் எது வித எதிர்ப்பும் இல்லாது அதனை வாங்கி செல்வார்கள். இவ்வாறான நடவடிக்கையினால் சில வேளைகளில் நீங்கள் பண இழப்பை சந்திக்க நேரிடுவதுடன், வாடிக்கையாளர்கள் உங்கள் மீது நம்பகத்தன்மையும் இழப்பர்.

இது மாத்திரமன்றி அவ் வாடிக்கையாளர் இங்குள்ள சட்ட நடவடிக்கையை நன்கு அறிந்து அதன் படி செயற்படுபவராக இருந்தால் உங்கள் மீது Trading Standard இல் முறையிட்டு சட்ட நடவடிக்கையுடன் அபராதப் பணமும் கட்ட செய்து வீடுவார்கள்.

எனவே நீங்கள் இவ்வாறன சிறு தவறுகளை கவனத்தில் கொள்வதுடன் Trading Standard அறிவுறுத்தலுக்கிணங்க பொருட்கள் மீது விலையை குறிப்பிட்டோ அல்லது பொருட்களின் முன்பாக விலைப்பட்டியை தொங்க விடுவதன் மூலம் உங்கள் வியாபாரத்தின் மீதான நம்பகத்தன்மையை அதிகரிப்பதுடன் அபராதப் பணம் கட்டுவது போன்ற தேவையற்ற செலவீனங்களை தவிர்க்கவும் வழி செய்யுங்கள்.

## என்ன விலை?

என்பதனை அறிந்து வைத்திருங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vahizan Disc World



**Get up to 10% off !!!** From our online shopping!!!



# வாகீசன் டிஸ்க் வேர்ள்ட்

எம்மிடம் மிகப் பழைய காலத்து படங்கள் தொடக்கம் இன்றுவரையுள்ள வீடியோ பிரதிகள், வீடியோ சீடிகள், டீவிடிகள் என்பன வாடகைக்கு அல்லது மிகக்குறைந்த விலையில் சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ விற்பனைக்குண்டு.

இவற்றை விட சகலவிதமான பக்திப்பாடல்கள், கர்னாடகப்பாடல்கள், கர்னாடகவார்த்தியஇசைகள் யாவும் **MP3,AUDIO CD, CASSETTE** ஆகியவற்றில் பெற்றுக்கொள்ளலாம்.

WE SELL TITLES FROM INRECO,GEETHANJALI,VEDU, RPG,AMUDAM AND FROM MANY OTHER FAMOUS COMPANIES!



Vahizan Disc World
52B Ealing Road, Wembley
Tel: 020 8902 8828
Email : Vahizan@aol.com
www.vahizan.com





Vmpv Video Ltd
537 High Road, Wembley
Tel:020 8902 5055
Email:Videovmpv@aol.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ayngaran® Telecom

The Ultimate Solution for Cost Effective Communication

# Ayngaran Telecom

## now offers unbeatable cheaper price to the destination of your choice

Sri Lanka and India 9p

Europe,USA,Canada & Australia 3P

Singapore and Malaysia 5P

South Africa 7P

New Customer Signup Call Free on

0800 6 35 36 37

(All Prices are inclusive of VAT)

All the prices mentioned above are in pence per minute and charged by the minute.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவுசார் மூலதனம்.

கடந்த இதழிலே அறிவுசார் மூலதனத்தின் பண்புகள் எவைகள் என பார்திருந்தீர்கள். அறிவுசார் மூலதனத்தில் தகமையை அதிகரித்து கொள்வது என்பது முக்கிய பண்பாகும். இதன்படி திறமைகளை வியாபார தந்திரோ உபாயங்களுக்கு ஏற்ப வரிசைப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் போட்டித் தன்மையானது பல நெறிமுறைகளுக்கூடாக வளர்கப்பட வேண்டும்.

எனவே ஒரு நிறுவனமானது தனது தகமைகளை வளர்பதற்கு பின்வருகின்ற ஐந்து பண்புகளும் பெரும் உதவி புரிகின்றன.

## வாங்குதல். Buy

ஒரு நிறுவனமானது திறமையான ஊழியர்களை உள்வாங்குவதும், அவர்களை தெரிவு செய்வதுமே வாங்குதலாகும்.

இத்தகைய நடவடிக்கையானது புதிய எண்ணக்கருவை உருவாக்கவும், பழைய பல கலாச்சார முறைகளை நீக்கவிடுதல் என்பவற்றை அடக்கும.

இத்தகைய புதியவர்களை உள்வாங்குவதனூடாக நிறுவனத்தின் புதிய சிந்தனை ஆற்றல் கொண்டவர்களை அதிகரிப்பதுடன் புதிய முறையான தந்திரோ உபாயங்களையும் உருவாக்க முடிவதுடன் அவ் நிறுவனத்தையும் வளர்சியடைய செய்யலாம்.

## உருவாக்குதல். Build

நிறுவனத்தினுடைய முகமையாளர்கள் அந் நிறுவனத்தில் தொடர்ந்து இருக்கக் கூடியவாறு புதிய ஊழியர்கள் தொழில நுட்பங்களை கற்றுக் கொள்ளக் கூடியவாறு நடவடிக்கை எடுப்பதே இதுவாகும். வழிகாட்டுதல், பயிற்சியளித்தல் போன்றவற்றுக்காக நிறுவனங்கள் பெருமளவு நிதி வசதிகளை ஒழுங்கு செய்தல் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய நிலையை அடைவதற்கே ஆகும். பாரிய நிதிச் செலவில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஊழியர்களிடையே புதிய எண்ணங்களை உருவாக்கவும், நடத்தைகளை மாற்றியமைக்கவும், முகாமையாளர்களுடன் ஊழியர்கள் இணைந்து பணியாற்றவே தூண்டும் எனக் கொள்ளப் படுகின்றது.

## பெறப்படல் Borrow

குறிப்பிட்ட ஒரு நிறுவனமானது புதிய எண்ணங்கள், உபகரணங்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையே இதுவாகும்.

வெளியிலிருந்து ஆலோசனைச் சேவை (Consultancy Service) பெறுவது இதில் முக்கியம் பெறுகின்றது. நிபுணர்களை வரவழைத்து கருத்துகளைப் பரிமாறுதல், கருத்தரங்குகளை நடாத்துதல், புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல் போன்றவற்றை வெளியில் இருந்து பெற்றுக் கொள்ளலே பெறப்படலாகும். இந்த நிலையில் பெருமளவான பணச்செலவும் நேரவிரையமும் ஏற்படலாம். சொந்தமாக எண்ணங்களை உருவாக்கும் திறன் மழுங்கடிக்கப்படலாம். இருந்த போதும் வெளி நிறுவனங்களது அனுபவங்களைப் பெற்றுக்கொள்வது அறிவுசார் மூலதன விருத்திக்கு அடிப்படையில் அமையும்.

## நீக்குதல் Bounce

நிறுவனங்கள் நியம பெறுபேறுகளை அடையாத நபர்களைக் கொண்டிருப்பது நன்மை தரமாட்டாது என்பதனால் அவர்களை நீக்கிவிடுதல் வேண்டும்.

சில நேரங்களில் ஊழியர்கள் திறமைகளை வளர்க்கவும், புதிய தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளவும் தவறிவிடுகின்றனர். வேறு சில சமயங்களில் சரியான முறையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தத் தவறியவர்களை நிறுவனங்கள் வைத்துக் கொள்ளகூடாது. அதாவது இவர்கள் நிறுவனத்தில் தொடர்ந்திருப்பது பெரும் பாதிப்பைக் கொண்டுவரும் என்பதாகும்.

## கட்டுதல்

ஒரு நிறுவனத்துக்கு பயிற்றப்பட்ட ஊழியர்கள் எல்லாத்துறைக்கும் முக்கியமாவர். இத்தகையவர்களை சிரேஸ்ட முகாமையாளர்களுடன் பழகவிடுவதனுடாக அவர்களுடைய திறமையை அறிவது, அணுகு முறைகளைக் கற்றுக் கொள்வது, தொழில்நுட்ப அறிவைப் பெறுவது போன்றன சாத்தியமாகின்றன.

நிறுவனத்தை விட்டு வெளியேறுகின்ற ஊழியர்களுடன் கதைத்து அவர்களை தொடர்ந்து நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு தூண்டுவது கட்டுதல் என்பதைக் குறிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட பண்புகளானவை அறிவுசார் மூலதனத்தை அதிகரிபதற்கு பெரிதும் உதவுகின்ற படி முறைகளாகும்.

அறிவுசார் மூலதனத்தை

பேராசிரியர் க தேவராஜா
BA(Hons) ,MA
யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகரிப்பதற்கான இன்னொரு வழியே அர்ப்பணிப்பு என்பதாகும். கூடுதலான அர்பணிப்பினைக் கொண்ட ஊழியர்கள் பொறுப்புக்கள் இல்லாத போதும் நன்றாக பணியாற்றுவர். தனிப்பட்ட ரீதியில் இயங்குபவர்கள் திறமைசாலிகளாக இருந்தாலும் ஒரு குழுவைப் போல் திறமையான பெறுபேறுகளைப் பெறமுடியாது.

இதன்படி ஊழியர்கள் எவ்வாறு மற்றவர்களைப் பற்றி உணர்கின்றார்கள், எவ்வாறு அவர்களுடன் நடந்துகொள்கிறார்கள் என்பது கவனிக்கப்படுகின்றது. மூலதனத்தின் அதிகரிப்பால் ஊழியர்களின் பொறுப்புகள் குறைந்துவிடக் கூடும்.

ஊழியர்களின் பொறுப்புகளை உயர்த்துவதற்குப் பல வழிகள் பின் பற்றப்பட முடியும். உலகளாவிய போட்டி, வாடிக்கையாளர் நலன், நெகிழும் தன்மை, உயர் கற்றல் செயற்பாடு, கூடிய குழுச் செயற்பாடு, கூடிய உற்பத்தித்திறன் என்பற்றை ஏற்படுத்தும் பொறுப்பு அவசியமாகின்றது. இந்த அனைத்து சவால்களையும் சமாளிப்பதற்கு அறிவுசார் மூலதமானது ஊழியர்களிடையே உடல், உள, எழுச்சிகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. பெரும்பாலன முகாமையாளர்கள் இதனை கருத்திற் கொள்ளாது ஊழியர்களிடம் தொடர்ந்து மேலதிகமான செயற்பாடுகளை எதிர்பார்கின்றனர்.

இதனால் ஊழியர்களிடம் சோர்வுத் தன்மையும், பொறுப்பற்ற தன்மையும் உருவாக முடியும். எப்பொழுதுமே ஊழியர்களிடம் அர்ப்பணிப்பு குறைவாக இருக்குமாயின் அதற்கான காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். இளந் தொழிலாளர் விரைவாக தொழிலின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் என்பதனால் அதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உங்கள் நிறுவனங்களிலே ஊழியர்களின் அர்பணிப்பை உயர்த்துவதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதனை அடுத்து வரும் இதழில் விரிவாக பார்ப்போம்.

உங்கள்
விளம்பரங்களுக்கு
அழையுங்கள்
07949000506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துபாய் போகலாமா?



கடந்த ஏழு இதழ்களிலும் நீங்கள் எவ்வாறு விமான சீட்டை பதிவு செய்வது. அப்படி பதிவு செய்யும் போது அதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் எவை என்பனவற்றைப் பார்த்திருந்தோம்.

உங்கள் விடுமுறை காலம் நெருங்கி வருகின்றமையால் ஏதாவது ஒரு நாட்டுக்கு செல்வதற்கான திட்டம் வகுக்க தொடங்கி இருப்பீர்கள்.

எனவே அத்தகைய திட்டங்களுக்கு உதவியாக இருக்கு என்ற நோக்குடன் இவ் இதழில் இருந்து உலகில் உள்ள உல்லாச நாடுகளுக்கு உங்களையும் கூட்டி செல்லலாம் என எண்ணியுள்ளேன்.

**முதலில் துபாய்க்கு செல்வோம்.**

துபாய், பாலைவன நாடுகளான ஐக்கிய எமிரேட் குடியரசு நாட்டில் இருக்கின்ற ஓர் நாடாகும். இன்று பாலைவனம் என்ற பேச்சுக்கே இடமில்லாது விண்ணை முட்டும் கட்டிடங்களுடன் அழகான நாடாக காட்சி தருகின்றது.

எண்ணெய் வள நாடான துபாயின் ஆட்சி முறையானது மன்னராட்சியாகவே இருக்கின்றது. தற்போதைய மன்னரது ஆட்சிலேயே நாடு பலதுறைகளில் முன்னேறி வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் பெருமளவான வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை அவர்கள் அரவணைப்பதனால் அத்துறை சார்ந்த வருமானத்துக்கும் குறைவில்லாது காணப்படுகின்றது.

இலண்டனில் இருந்து துபாய்க்கு போவதற்கான விமானக் கட்டணம் வரி உட்பட 250 பவுண்ஸ்களுக்கு பெறக்கூடியதாக இருப்பதுடன், ஆறு மணித்தியால வித்தியாசத்திலே புதிய ஒரு காலநிலையை அறியக்கூடியதாக இருக்கும். ஆம் முக்கியமாக ஏப்ரல் தொடக்கம் நவம்பர் வரை வெப்ப நிலை மிக மிக கூடுதலாக இருக்கும். இக் காலங்களில் வீதிகளில் நடப்பதே முடியாத காரியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தகைய வெப்ப கால பகல் நேரங்களில் காலை 11 மணியில் இருந்து பிற்பகல் 4மணி வரை வியாபார நிலையங்களை முடி பின்னர் 4மணியில் இருந்து இரவு 11 மணி வரை திறந்திருப்பருப்பது வழமையான விடையமாகும்.

துபாயின் வீதிகள்அனைத்துமே அழகாக காட்சி தரும் வகையில் பூந்தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

துபாய்கு நீங்கள் போவது என தீர்மானித்தால் அவசியமாக பார்க்க வேண்டிய இடங்களாக,

## Gold Souk

என்ற இடத்தை நீங்கள் ஒரு தங்கச்சுரங்கம் என்றே கூறுவீர்கள். இங்கு ஏறத்தாழ 400 நகைக் கடைகள் காணப்படுகின்றன. பாரம்பரிய அரேபிய, இந்திய நகைகளில் இருந்து நவீன நகைகள்வரை இலண்டன் விலையுடன் ஒப்பிடும் போது அரை விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

## Golden Sandy Beach

இது ஒரு அற்புதமான மணற் கடல் கரை. உலகில் எங்குமே காணமுடியாத இயற்கை காட்சியான முழுச் சூரியனை பார்த்து ரசிக்கலாம்.

## Meena Bazzar

இங்கு கொட்டிக்கிடக்கும் பொருட்களை பார்த்தால் நீங்கள் பிரமித்து போவீர்கள். அத்துடன் இவற்றின் விலையை பார்த்தீர்களாயின் உங்களால் நம்பவே முடியாத மலிவான விலையில் பெற்றுக் கொள்வீர்கள்.

## Sharjah

கிரிக்கெட் பிரியர்கள் நிச்சயமாக போகவேண்டிய ஓர் இடம்தான் இது. இம் மைதானத்துக்கு அருகில் உள்ள Um-AL-Quain நீர் பூங்கா ஒன்று உள்ளது கட்டாயமாக பார்க்க வேண்டிய இடமாகும்.

பாலைவனத்தில் சவாரி போவது என்பது வாழ்கையிலே கொடுத்து வைத்திருக்க வேண்டிய விடையமாகும். சவாரி செல்வதற்கு ஏற்ற வகையில் குளிரூட்டப்பட்ட வாகனத்தில் சென்று செந்நிற, பொன்நிற மணல் திட்டுக்களை கண்டு கழிக்கலாம்.

என்ன துபாய்க்கான பயணத்துக்கு தயாராகி விட்டீர்கள்தானே. மேலதிகமாக துபாயை பற்றி அறிய விருப்பமாயின் www.insightguides.com பாருங்கள்.

பாலா பத்மன்
Managing Director
Sky Wings Ltd



noolaham.org | aavanaham.org

# RHYTHM
## ENTERTAINMENTS

Rhythm Entertaiments
offers you a wide range
of Service

### AUDIO
We Rent and sell all those lates Tamil,Hindi,Sinhala, and English Movies

### Video & Photo Graphy
We do professional video filming and photography for all your memorable occassions. we also offer party decoration service.

உங்கள் சகலவிதமான
வீடியோ, ஓடியோ
புகைப்படங்கள், தொலைபேசி
அட்டைகளை நீங்கள்
பெற்றுக்கொள்ளலாம்.



790 HARROW ROAD WEMBLEY HA0 3EL
T: 020 8904 9040 F: 020 89041 9070
www.rhythmentertainments.com
info@rhythmentertainments.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரித்தானியாவின் முதல் பத்து பணக்கார கால் பந்து ஆட்டக்காரர்




| | |
|---|---|
| DAVID BECKHAM | £53M |
| ALAN SHEARER | £24M |
| SOL CAMPBELL | £23.6M |
| MICHAEL OWEN | £22M |
| RYAN GIGGS | £18M |
| ROBBIE FOWLER | £14.5M |
| RIO FERDINARD | £14.5M |
| DAVID SEAMEN | £11.5M |
| WAYNE ROONEY | £11M |
| GARY NEVILLE | £9M |

**mortgage advice you can trust**

ZURICH™

Call **SAM VENUGOPAL** BSc (Hons), DMS,MLIA (dip),MRSC
Financial Planning Consultant on
020 8437 2500 for the right mortgage advice

Zurich House,South Hertfordshire office Campus
Elstree Way, Borehamwood, Hartfordshire WD6 1JH

www.zurichadvice.co.uk

Mobile **07850 927964**

email:: sam.venugopal@zurichadvice.co.uk

YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT

Suitable security and adequate life cover may be required by the lender.As licensed credit brokers, written quotations are available on request. Representative only of zurich Advice Network Limited, regulated by the Financial Services Authority,represents only the zurich Management Amrketing Group for its life assurance,Pension and investment products

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Colonel Herland Sanders



அறுபத்திரண்டு வயது இது பொதுவாக ஈசிசெயரை (Easy chair) தேடுகின்ற வயது, ஆனால் இந்த வயதில் தான் Colonel Herland Sanders இன்று உலகின் மிகவும் பிரபல்யமான முதன் மூன்று விரைவுணவுச் சங்கிலிகளில் ஒன்றான KFC என அழைக்கப்படும் கென்டக்கி பிரைட் சிக்கனின் முதலாவது கடையை ஆரம்பித்தார் என்பது ஒரு வியப்பான விடையமாகும். Herland பிறந்தது 9ஆம் திகதி செப்டம்பர் மாதம் 1890 ஆம் ஆண்டு இவருக்கு ஆறு வயதாக இருக்கும் பொழுது இவரது தந்தையாரது இறப்பால் குடும்பத்தை பாரக்க வேண்டிய கட்டாயத்தால் தாயார் வேலைக்கு போகவே வீட்டிலுள்ள மூன்று வயதான தம்பியையும், சில மாதங்கள் மட்டும் நிரம்பிய தங்கையையும் பராமரிக்க வேண்டியவராகின்றார்.

இதனால் தன்னுடைய சகோதரங்களுக்கு தேவையான அனைத்து தேவைகளையும் விரும்பி செய்யும் போதே அவர்களுக்கு தேவையான உணவுகளையும் தன் கையாலேயே சமைத்து பரிமாறியதனால் சிறுவன் Herland தனது ஏழு வயதிலேயே சமையல் கலையில் தேர்ச்சியடைந்தான்.

Herland மாதம் ஒன்றுக்கு இரண்டு டொலர் சம்பளத்துடன் தனது பத்தாவது வயதில் தோட்டம் ஒன்றிலே முதலாவது வேலையில் இணைந்து கொண்டார்.

மகிழ்சியாக சென்று கொண்டிருந்த பன்னிரண்டு வயது சிறுவன் Herland தாயின் மறுமணத்தால் மனமுடைந்து வீட்டை வீட்டு வெளியேறி Green Ford என்னும் இடத்தில் உள்ள தோட்டம் ஒன்றில் வேலையில் இணைந்து பின்பு தனது பதினாறவது வயதில் இராணுவத்தில் இணைந்து கொண்டு Cuba விலும் தனது பணியை திறம்பட செய்து முடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னாலும் படித்து பட்டம் பெற முடியும் என்பதனை நிரூபிக்கு முகமாக தபால் மூலம் சட்டக் கல்வியை கற்று அதே துறையில் சிறிது காலம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தோடு போதும் என்று Herland சும்மா இருக்கவில்லை காப்புறுதிகளை விற்பனை செய்தல், படகுகளை வாடகைக்கு விடுதல், Tyre விற்பனை, எரிபொருள் நிலையத்தை நிர்வகித்தல் என பல தொழில்களில் அவர்கள் தனது முத்திரையைப் பதித்த போதும் அவரால்



அத்துறைகளிலே திருப்தியடைய முடியவில்லை இதனால் தேடலுக்கு புது புது வடிவங்களைக் கொடுத்து தனது முயற்சியை தொடர்ந்தார்.

இதனால் தான் Herland அவர்கள் தன்னுடைய நாற்பதாவது வயதில் தான் நடாத்தி வந்த எரிபொருள் நிலையத்தின் அருகில் உள்ள தன்னுடைய தங்குமிடத்திலேயே தனது உணவு மேசையை வாடிக்கையாளர்கள் பாவனைக்கும் ஏற்றது போல் ஓர் உணவு விடுதியை ஆரம்பித்தார்.

சிறுவனாக இருக்கும் போது தன்னுடைய தம்பி, தங்கைக்காக சமைத்தது இப்போது இவருக்கு கை கொடுத்தது இதனால் இவர் தயாரித்த அனைத்து உணவுகளுமே சுவையில் தரமானதாக இருந்ததால் நாளுக்கு நாள் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்ததால் அவர்களது வருகைக்கேற்ப அவருடைய சிறிய இடம் போதாததாக இருந்தது.

இதனால் அருகில் இருந்த 142 இருக்கைகளை கொண்ட உணவு விடுதியை விலைக்கு வாங்கி ஒன்பது வருடங்கள் நடாத்தி வந்தார்.

ஒன்றுக்கு பின் ஒன்று என்பது போல் தனக்கு பிடித்த சமையல் கலையிலேயே எதாவது புரட்சியை செய்ய வேண்டும் என்னும் நோக்குடன், பெரும் முயற்சியாலும் பல ஆராய்ச்சிகளாலும் பதினோர் வகையான மூலிகைகளைக் கொண்டும் வாசனைத் திரவியங்களை கொண்டும் இன்று உலகமே வாயூறுகின்ற KFC சிக்கனுக்கான செயல்முறையையும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உள்ளீட்டுப் பொருட்களையும் கண்டு பிடித்தார். இவர் கண்டு பிடித்த உள்ளீட்டுப் பொருட்களும், செயல்முறைகளுமே இன்று வரை உலகம் பூராகவும் உள்ள அனைத்து KFC கிளைகளிலும் பயன்படுத்தப் படுகின்றது.

'சாண் ஏற முழம் சறுக்கும்' இது பழமொழி, இது வியாபாரிகளுக்கு மிகவும் பொருத்தமாகும். 1950 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இவரது உணவகமும், எரிபொருள் நிலையமும் அமைந்துள்ள Corbin நகர வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தால் உணவகம் முடப்பட்டது.

அதன் பின் ஐந்து ஆண்டுகள் அரசாங்கத்தின் உதவித் தொகையிலேயே வாழ்கையை ஓட்ட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானர். இருந்தும் மனம் தளராத Herland அவர்கள் தன்மீது கொண்ட நம்பிக்கையாலும் தான் கண்டுபிடித்த KFC Chicken தயாரிப்பு முறை, அதனுடைய உள்பொருட்களின் சூட்சுமத்தையும் மூலதனமாக கொண்டு 1955 ஆம் ஆண்டு தன்னுடைய 65 ஆவது வயதில் மீண்டும் வியாபார உலகில் கால் எடுத்து வைத்து அமெரிக்க வீதிகளில் உள்ள ஒவ்வொரு உணவகங்களாக ஏறி இறங்கி தான் கண்டுபிடித்த KFC Chicken உள்ளீட்டு பொருட்களை சந்தைப்படுத்த முயற்சி செய்தார். ஆரம்பத்தில் பெரிய ஏமாற்றங்களே அவருக்கு பலனாக கிடைத்தது. காலம் மாறும் வரை காத்திருக்காது தான் மீண்டும் உணவகத்தை ஆரம்பித்தார்.

மீண்டும் அவரது கொடி வர்த்தக உலகில் வீசத்தொடங்கியது உணவின் சுவை அறிந்து மக்கள் கூட்டம் கூட்டமாக அலை மோதினார்கள்.

1964 ஆண்டளவில் அமெரிக்காவிலும், கனடாவிலும் ஏறத்தாழ 600 உணவகங்கள் KFC ஆக மாறியமை அவருடைய வெற்றியின் முதல் படியாக அமைந்தது.

1969 ஆம் ஆண்டளவில் KFC நியூயோர்க் பங்குச் சந்தையிலே வரிசைப் படுத்தப் படுமளவுக்கு முன்னேறியது.

இன்று அமெரிக்காவில் மாத்திரமன்றி உலகின் 80 நாடுகளில் KFC Chicken பரந்து இருப்பது மாத்திரமன்றி அதே போன்ற சாயலுடன் பல பெயர்களிலும் Chicken கடைகள் ஆரம்பித்ததற்கு Herland அவர்களே முன் உதாரணமாகும்.

**வர்த்தக உலகில் சாதிப்பதற்கு வயது ஒரு தடையல்ல என்பதற்கு Colonel Herland Sanders ஒரு எடுத்து காட்டு** *So உங்களின் வயது என்ன?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GLOBAL ESTATEAGENTS

To let · To let · To let · To let · To let · To let · To let · To let · To let · To let · To let ·



**SPRING GROVE, MITCHAM £950 PCM**
*Three Bed House *Fully Furnished
*Morden Fitted Kitche
*Gas Central Heating
*Fully Double Glazed
*Two bathrooms
*Residents parking
*Close to Mitcham/ Tooting BR
* Avilable Now



**SUMMERHILL WAY, MITCHAM £675 PCM**
*One Bed Flat
*Fully Furnished
*Morden Fitted Kitche
*Gas Central Heating
*Fully Double Glazed
*Common Garden
*Allocated Parking
*Close to Tooting
* Avilable Now



**MORDEN GARDEN, MITCHAM £1000 PCM**
*Three Bed House
*Fully Furnished
*Morden Fitted Kitche
*Gas Central Heating
*Fully Double Glazed
*Garden
*Two Reception
*Off Street Parking
*Close to Mitcham/ Morden
* Avilable Now



**BOND ROAD, MITCHAM, £ 1000 PCM**
*Four Bed House
*Fully Furnished
*Morden Fitted Kitche
*Gas Central Heating
*Close to Mitcham
* Avilable Now



**WORTHINGTON CLOSE,MITCHAM.£725 PCM**
*Three Bed House
*Fully Furnished
*Morden Fitted Kitchen
*Gas Central Heating
*Allocated Parking
*Close to Mitcham Town Centre / Tooting BR
* Avilable Now



**SUMMERHILL WAY, MITCHAM £675 PCM**
*Two Bed G/Floor Flat
*Fully Furnished
*Fitted Kitche
*Gas Central Heating
*Fully Double Glazed
*Allocated Parking
*Close to Tooting
* Avilable Now

**020 8682 5100**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

MTG

# Morjarias Toys & Gifts Ltd.

## Wholesale Cash & Carry

**Toys - Stationary - Tools - Tapes - Ornaments - Vases**

Soft Toys - Plastic Ware - Batteries - Clocks - Toiletries

Party Ware - Candles - Children's Books - Valentines



**Household Goods - Hair Accessories - Confectionery**

**Morjarias House**
**North Circular Road**
**Junction Abbey Road**
**London NW10 7UD**

**www.mtl-toys-gifts.co.uk**

**Tel: 020-8357 1554**

**Trade Only**

**Opening Times**

| | |
|---|---|
| Monday | 10.00 am – 6.00pm |
| Tuesday | 10.00 am – 6.00pm |
| Wednesday | 10.00 am – 6.00pm |
| Thursday | 10.00 am – 8.00pm |
| Friday | 10.00 am – 6.00pm |
| Saturday | Closed |
| Sunday | 9.00 am – 3.00pm |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GL Financial Services Ltd

Total, Trusted, Mortgage Solutions...

உங்கள் மனதிற்கு விருப்பமான
வீட்டை வாங்குவதில்
பிரச்சனையா?
Mortgage எடுக்க கஷ்ரமாய்
உள்ளதா?
வீண் கவலை வேண்டாம்

மிக குறைந்த வட்டி வீதத்துடன்
மிக குறைந்த முன் பணத்துடன்
மிக குறைந்த காலத்தில்
Mortgage செய்து தர
காத்திருக்கிறோம்.

உங்களின் Credit Problems
கவனத்தில் கொள்ளப்பட்டு
தகுந்த முறையில் Mortgage
செய்து தரப்படும்.

வர்த்தக ஸ்தாபனங்கள்
வாங்குவதற்குக் கடன் வசதிகள்
மிகச் சிறப்பான முறையில்
ஒழுங்கு செய்து தரப்படும்.

247 Mitcham Road, Tooting
London SW17 9JQ
Future Address
239 Mitcham Road, Tooting
London SW17 9JG

Tel: 020 8672 2333
Fax: 020 8682 5110

Your home is at risk if you do not keep up repayments on mortgages or other loans secured on it


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY VASAN PRINTERS - 020 8646 2885